**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**
**S.C. 31/2025**
**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சாம்தீபக் | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு. மரிய அமல்ராஜ் | **Calling** | : | கறிக்கடை வேலை |
| **Village** | : | மேட்டுப்பட்டி | **Religion** | : | கிறிஸ்துவர் |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | **26** |
| | | | **Dated** | : | **18.08.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜர்.**

அ.சா. 6 (பட்டியல் சாட்சி 7), **திரு. சாம்தீபக்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கறிக்கடை வைத்து வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். 23.05.2024ம் தேதி இரவு சுமார் 11.00 மணி அளவில் நானும், பெஞ்சமின் பிரிட்டோ என்பவரும் எம்ஜிஆர் நகரில் நின்று பேசிக் கொண்டு இருந்தபோது, திண்டுக்கல் தாலுகா காவல்நிலைய போலீசார் வந்து, சம்பவ இடத்தை லைட் வெளிச்சத்தில் பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் வரைபடம் வரைந்தார்கள். மேற்படி பார்வை மகஜரில் நானும், பெஞ்சமின் பிரிட்டோவும் கையொப்பம் செய்தோம். **மேற்படி பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலீசார் என்னை சம்பவ இடத்தில் வைத்து மாலை சுமார் 06.00 மணி அளவில் விசாரித்தார்கள். சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்து வரைபடம் வரைந்ததாக மேற்படி பார்வை மகஜரில் இருந்தது. அசா. 2 நீலகண்டன் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் இரண்டு, மூன்று முறை பார்த்து இருக்கிறேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்று நான் படித்து பார்த்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும், போலீசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும், என் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 11.09.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..)Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.